பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 08 ஞாயிற்றுக்கிழமை 22.06.2025 கதிர் 225

### இனி அது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் இறுதி முடிவுகள், என்பிபி சுமார் 200 உள்ளூராட்சி நிறுவனங்களில் மட்டுமே அதிகாரத்தை வென்றுள்ளது

# 35 வருடங்களாக ஆக்கிரமிப்பிலுள்ள காணிகளை விடுவிக்கப் போராட்டம்

## வலி. வடக்கு மக்கள் நேற்றுத் தொடங்கினர்



35 வருடங்களாக படையிரின் ஆக்கிரமிப்பில் உள்ள தமது காணிகளை விடுவிக்கக்கோரி வலி. வடக்கு மக்கள் நேற்று அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். வலிகாமம் வடக்கிலுள்ள

## மலையக மக்களின் காணி உரிமைக்காக யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் குரல்

மலையகத்தமிழ்மக்களின் காணி உரிமைக்காகக் குரல் கொடுக்க இனிமேல் பின்னிற்கப்போவதில்லைஎன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று அறிவித்தது. மலையகமக்களின் நிலம் சார்ந்த இருப்பியலை

## வாகன விபத்தில் குடும்பஸ்தர் சாவு

### கிளிநொச்சியில் பரிதாபம்

கிளிநொச்சியில் இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 155 ஆம் கட்டைப் பகுதியில் நேற்று இரவு

## பதுளையில் பஸ் கவிழ்ந்து மூவர் சாவு: 32 பேர் காயம்

பதுளை, துன்ஹிந்த பகுதியில் சுற்றுலா பஸ் ஒன்று நேற்று மாலை விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 32 பேர் காயமடைந்துள்ளனர்.

அனுராதபுரம், தம்புதுதேகமபிரதேசத்தில்இருந்து பதுளைப் பகுதிக்குச் சுற்றுலாப் பயணிகளை

## குருநாகல் விகாரையில் அரசுத் தலைவர் வழிபாடு



குருநாகலில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க அத்கந்த ராஜமஹா விஹாரையில் நேற்று அரசுத் தலைவர் அநுரகுமார வழிபாடியற்றினார். அங்கு நடைபெற்ற ஸ்ரீ தலதா பொசன் பெரஹெராவின் நூற்றாண்டு தொடக்க விழாவிலும் உரையாற்றினார்.

வரலாற்று சிறப்புமிக்க அத்கந்த ராஜமஹாவிஹாரையில்ஆண்டுதோறும் நடைபெறும்ஸ்ரீதலதாபொசன்பெரஹெரா 1925இல்தொடங்கியது, இந்தநூற்றாண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் ஒரு நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் அட்டையும் வெளியிடப்பட்டது.

ஸ்ரீ தலதா பொசன் பெரஹெராவை முன்னிட்டு இரண்டு அறிவார்ந்த தொகுப்புகள் வெளியிடப்பட்டன, மேலும் ஸ்ரீ தலதா பொசன் பெரஹெராவை முன்னிட்டு ஒரு பாடல் வெளியிடப்பட்டது.

"ஆன்மீக ரீதியாக சீரழிந்த

# 'அணையா விளக்கு'க்கு தமிழ் அரசு பேராதரவு

## கட்சி உறுப்பினர்கள், பொதுமக்களை அணிதிரளவும் அழைப்பு

யாழ். செம்மணி சிந்துப்பாத்திப் புதைகுழி மீது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையரின் கவனத்தை ஈர்க்கும் விதத்தில் தொடர்ந்து 3 நாட்கள் மேற்கொள்ளப்படவுள்ள 'அணையா விளக்கு' போராட்டத்திற்கு தமிழ் அரசுக் கட்சி தனது முழு ஆதரவையும்அறிவித்துள்ளது.தமது கட்சியின் உறுப்பினர்கள், தொகுதி மற்றும் மாவட்டத் தலைவர்கள், தலைவர்கள் அனைவரும் இந்தப் போராட்டத்தில்பங்கேற்கவேண்டும் என்று அது அறிவித்துள்ளது. அத்துடன் பொதுமக்களும் இந்தப் போராட்டத்திற்குப் பேராதரவு தரவேண்டும்என்றுகட்சியின்பொதுச் செயலாளர் சுமந்திரன் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

'மக்கள்செயல்'என்கின்றதன்னார்வ இளையோர் அமைப்பால் ஜூன் 23 தொடக்கம் 25 வரையில்

## 'அணையா விளக்கு' போராட்டத்திற்கு யாழ். பல்கலை மாணவர்கள் ஆதரவு

யாழ்ப்பாணம்செம்மணிபகுதியில் நடைபெறவுள்ள 'அணையா விளக்கு' போராட்டத்திற்கு தமிழர் தேசமாக அனைவரும் அணி திரள வேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப் பட்டவர்களுக்குச் சர்வதேச நீதி கோரியும், சர்வதேசக்கண்காணிப்புடன் மனிதப் புதைகுழி அகழ்வை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தியும் 'மக்கள் செயல்' என்கின்ற தன்னார்வ இளையோர் அமைப்பால் ஜூன் 23 தொடக்கம்25வரையில்செம்மணி

## அணையா விளக்கு போராட்டத்திற்கு இயற்கையின் நண்பர்களும் ஆதரவு

செம்மணியில் நடைபெறவுள்ள 'அணையா விளக்கு' போராட்டத்துக்கு 'இயற்கையின் நண்பர்கள்' இயக்கமும் ஆதரவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

செம்மணி மனிதப்புதைகுழி என்பது இலங்கைத்தீவின் கறுப்புப் பக்கங்களில் முக்கியமான இடத்தைப் பெறுகிறது.

செல்வி கிருசாந்தி வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டமையை அம்பலமாகி, செம்மணி மிகமுக்கியமான இடமாக அடையாளப்படுத்தப்பட்டதுமட்டுமல்லாது, கடந்த 2006 முதல் 2009 வரை அங்கு பலவன்செயல்கள் நிகழ்ந்திருக்கக்கூடும் என்று சந்தேகிக்கும் அளவிற்கு செம்மணி குறித்த பார்வை தமிழ்மக்களிடம் உண்டு.

உண்மையை கண்டறியவும், குற்றவாளிகளைகண்டறியவும்செம்மணி சுடுகாட்டை அண்டி அடையாளம் காணப்பட்ட மனிதப்புதைகுழிகள் அனைத்தும் தோண்டப்பட்டு அந்த எலும்பு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு காபன் பரிசோதனையும், குற்றவியல் விசாரணையும் செய்யப்படல் வேண்டும். கைக்குழந்தைகள் மற்றும் சிறுவர்கள், தாய்மார்கள், அப்பாக்கள், சகோதரங்கள் என பலரும் கொன்று புதைக்கப்பட்டிருக்கிறார்கள்.

# வழங்கிய வாக்குறுதிக்கு முற்றிலும் மாறாக எரிபொருள் மாபியாவிற்கே அரச ஊக்குவிப்பு

## ஆளும்தரப்பு மீது எதிர்க் கட்சித் தலைவர் பாய்ச்சல்

தற்போதுள்ள எரிபொருள் மாபியாவை மாற்றியமைத்து புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஊக்குவித்துமுறைமைமாற்றத்தைக்கொண்டு வருவோம் என்று என்பிபி ஆளும்தரப்பு தேர்தலுக்கு முன்னர் உறுதியளித்திருந்தது. இருந்தபோதிலும் இன்று, எரிபொருள் ஆற்றல் மாபியாவை ஊக்குவிக்கும் நிலைக்கு ஆளும்தரப்பு வந்துள்ளது - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மீண்டும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் நேற்று விசேட அறிவிப்பு ஒன்றை விடுத்தார் அவர். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கூரைகளின் மீது பொருத்தப்படும் சூரிய மின்தகடுகளுக்கானகட்டணம்ஒருகிலோவாட் மணிக்கு ரூ.37 இல் இருந்து ரூ.20 ஆக 45 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. இது சூரிய சக்தியை ஊக்குவிக்கும் நடவடிக்கை அல்ல. புதுப்பிக்கத்தக்க ஆற்றல்களை நோக்கித் திரும்பும் பலரை அதனை விட்டும் விரட்டியடிக்கும்நடவடிக்கையாக அமைகிறது. அவ்வாறேஇதுஎரிபொருள்ஆற்றல்மாபியாவை மேலும் வலுப்படுத்தும் நடவடிக்கையாகவும் அமைந்து காணப்படுகின்றது ஆளும்தரப்பால் எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை ஏராளமான சிறிய மட்ட தொழில் முயற்சியாளர்கள் மற்றும் சூரிய ஆற்றல் தொழில்முனைவோருக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

1,000 தொழில் நடவடிக்கைகளில் பணிபுரியும் 40,000 க்கும் மேற்பட்ட

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

என்பதைக் காட்டியது. திசைகாட்டிக்கு சுமார் 150 உள்ளூராட்சி நிறுவனங்களில் பெரும்பான்மை இல்லை, மேலும் எதிர்க்கட்சி குழுக்களுக்கும் அங்கு அதிகாரத்தை பெறுமளவிற்குப் பலம் இல்லை. இதனால் அந்த உள்ளூராட்சி நிறுவனங்களில் அதிகாரத்தை நிலைநாட்ட எதிர்க் கட்சிகள் பேச்சு நடத்தின.

அதேபோன்று, சுயேச்சைக் குழுக்களுடன் இணைந்து பல உள்ளூராட்சி நிறுவனங்களில் அதிகாரத்தைக் கைப்பற்றும் திறன் இருந்ததால், திசைகாட்டி சில சுயேச்சைக் குழுக்களுடன் பேச்சு நடத்தியது.

இருப்பினும், தேர்தலுக்கு முன்பு திசைகாட்டி மேற்கொண்ட பரப்புரையில், திசைகாட்டி தவிர மற்ற அனைத்துக் கட்சிகளும் திருடர்கள் என்றும், மக்கள் அவர்களை நிராகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், குறிப்பாக சுயேச்சைக் குழுக்களில் இருந்து தேர்தலில் போட்டியிடுபவர்களை நிராகரிக்கவேண்டும் என்றும் கூறிய திசைகாட்டி கடைசியில் அவர்களிடம்தான் தஞ்சமடைந்து பிச்சை கேட்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்க்கட்சி திசைகாட்டியை நோக்கி விரல் நீட்டி, திசைகாட்டி, திருடர்களாக அபிஷேகம் செய்தவர்களுடனேயே அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான விவாதங்களைத் தொடங்கியுள்ளது என்று குற்றஞ்சாட்டியது. இதன் மூலம் திசைகாட்டியின் வெள்ளை ஆடை கழற்றப்பட்டதாகவும் கூறியது. இருப்பினும், எதிர்க்கட்சியின் இந்தக் குற்றச்சாட்டுக்கு மத்தியில், திசைகாட்டி கொழும்பு மாநகர சபையில் சுயாதீன குழுக்களுடன் இணைந்து அதிகாரத்தைப் பெற்றது. வேறு பல சபைகளிலும் அது இவ்வாறு அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

இவ்வாறாக இலங்கையின் உள்ளூராட்சி சபைகளில் அதிகளவு சபைகளைக் கைப்பற்றிய தனிப்பெரும் கட்சி என்ற இடத்தை என்பிபி இன்று பிடித்துள்ளது. அதற்கு அடுத்த நிலையில் எந்தவொரு தேசியக் கட்சியும் இல்லை என்பதுதான் நிலமை. அந்த இரண்டாவது இடத்தை தமிழ் அரசுக் கட்சி 3-0க்கும் மேற்பட்ட சபைகளைப் பிடித்ததன் மூலம் பெற்றுக்கொண்டுள்ளது. வடக்கு கிழக்கு முழுவதும் அது கிட்டத்தட்ட 35 சபைகளைப் பிடிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும் இப்போது வரைக்கும் 30 சபைகளை உறுதியாகப் பெறும் நிலை ஏற்பட்டுள்ளது. அடுத்த வாரத்தில் உள்ளூராட்சி சபைகள் எல்லாம் அமைக்கப்பெற்று முடிந்ததும் இந்த விவகாரம் தெளிவாகிவிடும்.

இப்படி இலங்கையிலேயே இரண்டாவது பெரிய கட்சியாக, 1977இல் இடம்பெற்றது போன்று உண்மையான ஒரு எதிர்க்கட்சியாக என்பிபி அலையை உடைத்த பெருமை தமிழ் அரசுக் கட்சியையே சாரும். அதற்குக் காரணம் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் தமது பேராதரவை தமிழ் அரசுக் கட்சிக்கு வழங்கியதுதான். அப்படி வழங்கப்பட்ட மக்களாணைக்கு ஏற்ப செயற்படுவதானால் தமிழ் அரசுக் கட்சியின் தலைமையின் கீழ்தான் ஏனைய தமிழ் கட்சிகள் அனைத்தும் சேரவேண்டும். ஆனால், தமிழ் அரசுக் கட்சியிடம் தோற்றுப்போன கட்சிகள் எல்லாம் சேர்ந்துகொண்டு, மக்கள் ஆணை கூட்டுச் சேர்வதற்குத்தான் உள்ளது அதனால் தம்மோடு தமிழ் அரசுக் கட்சி இணைவேண்டும் என்று கோமாளிக்கூத்தாடுகின்றன.

ஒன்று இவற்றுக்கு தமிழ் அரசுக் கட்சியை நேருக்கு நேர் எதிர்த்து நின்று அரசியல் களமாடும் துணிச்சல் வேண்டும். அல்லது தமிழ் அரசுக் கட்சியின் தலைமையை ஏற்று அதன் பின்னால் அணிதிரளும் அர்ப்பணிப்பாவது வேண்டும். இவையிரண்டும் இல்லாமல் இனத்தின் பெயரால் சதி அரசியல் செய்துகொண்டிருக்கின்றன இந்தக் கட்சிகள்.

தமிழர்களைப் பற்றிய ‘குழிக்குள் நண்டு'க் கதை ஒன்றுண்டு. அதற்கு இந்தத் தமிழ்க் கட்சிகள்தான் நல்ல உதாரணம். .

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அணையா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செம்மணி வளைவுப் பகுதியில் ‘அணையா விளக்கு' போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்திற்கான தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவை அம்பாறையில் வைத்து நேற்று அறிவித்தார் அதன் பொதுச்செயலாளர் சுமந்திரன். அங்கு செய்தியாளர்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் தற்போது இலங்கை வரக்கூடாது என நூற்றுக்கும் மேற்பட்ட பொது அமைப்புக்கள் அவரிடத்தில் வேண்டியிருந்தன. அதையும் மீறி அவர் இலங்கை வருகின்றார். அவருடைய வருகையில் விசேடமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி சம்பந்தமான விடயங்களில் அவர் கரிசனை செலுத்தப்படவேண்டும், பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை அரசு பின்னிற்பதை அவதானித்து அதற்கான தனது கருத்துக்களை அவர் சொல்லவேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரிடம் நாம் கோரிக்கை விடுத்திருக்கின்றோம். அவரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளையும் கேட்டிருக்கின்றோம்.

விசேடமாக யாழ்ப்பாணம்-செம்மணியில் மனிதப்புதைகுழி திரும்பவும் அகழப்படுகின்றது. அதில் மிகவும் மோசமான விடயங்கள் வெளிவந்து கொண்டருக்கின்றன. பெண்கள், குழந்தைகள் உட்படப் பலரின் மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்படுகின்றன.

இதேநேரம் சில அமைப்புக்கள், செம்மணிப் புதைகுழிக்குச் சர்வதேச நீதி கோரி ‘அணையா விளக்கு' என்ற பெயரில் மூன்று தினங்கள் தொடர் போராட்டத்தை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளன. இந்தப் போராட்டத்தில் எமது கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அணிதிரண்டு பங்கேற்குமாறும் மிகவும் அன்போடு வேண்டிக்கொள்கின்றேன்.

இது எங்களது தேசத்துக்கு - எங்களது மக்களுக்கு மிகவும் முக்கியமான ஒரு போராட்டம். உண்மைகள் வெளிவர புதைகுழி தோண்டப்படவேண்டிய விடயம் பகிரங்கமாகச் செய்யப்படவேண்டும். இதனை ஐ.நா. போன்ற அலுவலகங்கள் மேற்பார்வை செய்ய வேண்டும் --என்றார்.

## யாழ். பல்கலை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வளைவுப்பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ளது ‘அணையா விளக்கு' போராட்டம்.

இந்தப் போராட்டம் தொடர்பாக கருத்து தெரிவித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் லகிதர் தெரிவித்ததாவது:

-சிவில் சமூக அமைப்புகள் இணைந்து ‘அணையா விளக்கு' என்ற போராட்டத்தை மனித புதைகுழிக்கு சர்வதேச நீதி வேண்டி முன்னெடுக்கவுள்ளதாக அறிய முடிகிறது. நாங்கள் ஒரு பங்காளராக பங்கேற்று முற்றுமுழுதாக வடக்கு கிழக்கில் மிகப்பெரிய அழைப்பை முன்னெடுக்கின்றோம். எமது உறவுகளுக்காக உயிரிழந்த உறவுகளுக்காகவும் இழைக்கப்பட்ட அநீதிக்காகவும் தமிழ்த் தேசமாக திரண்டு போராட்டத்தில் ஒன்றுசேர வேண்டும்.

இலங்கைக்கு தற்போது வருகை தரவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஆணையர் யாழ்ப்பாணத்திற்கும் வருகை தரவுள்ளார் என்று அறிய முடிகிறது. மிக முக்கியமாக செம்மணி சித்துபாத்தி இந்து மயானத்தை மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள பகுதியை மனிதப் புதைகுழியாக அறிவிக்க வேண்டும்.

தொடர்ச்சியாக சர்வதேச நியமங்களுக்கு உட்பட்டு சர்வதேசத்தின் முற்றுமுழுதான தலையீட்டுடன் அகழ்வாய்ந்த் தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும். செப்டம்பர் மாதத்தில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபை கூட்டத்தில் ஈழத் தமிழர்களுடைய பிரச்சினையை திசை திருப்பவே மனித உரிமைகள் ஆணையாளரை இலங்கை ஆளும்தரப்பு அழைத்துள்ளது. வடக்கு-கிழக்கு தமிழர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திஎங்கள் பிரச்சினைகளையும் மனித புதைகுழிகள் தொடர்ச்சியாக தோண்டப்படும் விடயங்களையும் வெளிப்படுத்தவேண்டும் - - என்றார்.

## குருநாகல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமூகத்தில் எவ்வளவு பௌதீக வளர்ச்சி செய்யப்பட்டாலும் அதனால் எந்தப் பயனும் இல்லை என்றும், நெறிமுறை மற்றும் ஆன்மீகப் பண்புகளைக் கொண்ட குடிமக்கள் மூலம் ஒரு நாட்டின் கலாசார சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும்'' என்றும் அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க தெரிவித்தார்.

## 35 வருடங்களாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2400 ஏக்கர் காணிகளை விடுவிக்கக்கோரும் இந்தப் போராட்டம் தொடர்ச்சியாக இடம்பெறும் என்று அறவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டம், தெல்லிப்பழை, மயிலிட்டிச் சந்தியில் காணி உரிமையாளர்களால் முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டத்தில் பதாதைகளைத் தாங்கியவாறு பல டசின் கணக்கானவர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

மக்களின் விவசாய நிலங்கள், குடியிருப்பு நிலங்கள் மற்றும் தொழில் நிலையங்கள் உள்ளிட்ட பல்வேறு காணிகள் போர் காரணமாக கடந்த 35 வருடங்களுக்கு மேலாக உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து வருகிறது ஆனால் போர் நிறைவிற்கு வந்த பின்னரும் ஆட்சிக்கு வந்த எந்தவொரு ஆட்சியாளர்களும் இந்தக் காணிகளை விடுவிப்பதில் அக்கறை செலுத்தவில்லை.

## பதுளையில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றி வந்த தனியார் பஸ் பதுளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹியங்கனை வீதி, 4ஆம் கட்டைப் பகுதியில் வீதியில் கவிழ்ந்தது.

பஸ்ஸில் பயணித்த 35 பேரும் காயங்களுக்குள்ளாகி பதுளை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் மூவர் சிகிச்சைப் பயனின்றி உயிரிழந்துள்ளனர் என்று வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்குப் பொறுப்பான வைத்தியர் பாலித்த ராஜபக்ச தெரிவித்தார்.

பஸ்ஸை செலுத்திய சாரதியால் பஸ்ஸின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனமையே விபத்து ஏற்படக் காரணமாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

## வாகன ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்து இடம்பெற்றது. எரிவாயு சிலிண்டர் ஏற்றிக்கொண்டு வந்த வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் இருவர் பயணித்த நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றைய நபர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். கிளிநொச்சி, விநாயகபுரத்தைச் சேர்ந்த 33 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

## இயற்கையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

15-20 ஆண்டுகளுக்குமுன் அந்த வீதியில் திரிந்தவர்களாயிருக்கலாம்,

எங்களோடு பேசியவர்களாக இருக்கலாம். அவர்கள் மனித சமூகமே வெட்கி தலைகுனியும் வகையில் பூவாகவும், பிஞ்சாகவும் கொன்று புதைக்கப்பட்டு இருப்பது அதிர்ச்சி அளிக்கின்றது. பாதிக்கப்பட்ட மக்கள் அமைதியான அல்லது மௌனமான முறையில் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான காரணம் எங்களிடம் வார்த்தைகளோ, கோசங்களோ இல்லை என்பதல்ல பொருள். இந்தத் தீவிலே எங்களுக்கான நீதி கடந்த நூற்றாண்டிலிருந்து மறுக்கப்பட்டு மௌனமாக்கப்பட்டிருக்கிறது. செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதி கோரியும். சர்வதேசக் கண்காணிப்புடனான மனிதப் புதைகுழி அகழ்வை வலியுறுத்தியும் மக்கள் செயல் என்கிற தன்னார்வ இளயோர் அமைப்பினால் தமிழர்களது பண்பாட்டில் நம்பிக்கை சார்ந்த மரபாக இருக்கின்ற அணையாவிளக்கினை முன்னிலைப்படுத்தியே வடிவமைக்கப்பட்டுள்ளது.

எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க எதிர்வரும் 23, 24, 25 ஆகிய நாள்களில் குரல்கள் நசுக்கப்பட்டு, கை, கால்கள் கட்டப்பட்டு, கொன்று புதைக்கப்பட்ட எமது சக தமிழர்களின் நீதிக்காக ஒன்று கூடும்படி அனைவரிடமும் கேட்கிறோம். தமிழர்களை ஒன்றாக இணைக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த கவனவீர்ப்பு போராட்டத்துக்கு இயற்கையின் நண்பர்கள் இயக்கம் தனது ஆதரவை தெரிவித்துக்கொள்கின்றது.

## வழங்கிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களை இந்த சூரிய சக்தி பேனல் கட்டண 45 வீதக் குறைப்பு மோசமாகப் பாதித்துள்ளது. அவர்களின் தொழில்களும் கேள்விக்குறியாக மாறிவிட்டன. முழுத் துறையும் பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளன. - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நமது நாடு எரிசக்தி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள தருணத்தில், 2024 ஆம் ஆண்டளவாகும்போது சூரிய மின்சக்தித் மூலம் நமது எரிசக்தி கட்டமைப்பிற்கு 500 மெகா வாட் பங்களிப்பு வழங்கப்பட்டன. 70 வீத புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு மாறுவதே ஆளும்தரப்பின் அவா என்றாலும், தற்போதைய ஆளும்தரப்பு சூரிய ஆற்றலையும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியையும் அழித்து, எரிபொருள்கள் மீதமைந்த எரிசக்தி மாபியாவை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

இது முறைமை மாற்றமா? இல்லை. மாறாக தற்போதுள்ள எரிபொருள் மற்றும் எரிசக்தி மாபியாவை அவ்வாறே தொடரும் நடவடிக்கை. சூரிய சக்தி நாட்டிற்கு 20 ஆண்டுகளுக்கு நிதி நிலைத் தன்மையை பெற்றுத் தருகிறது. நீண்டகால சேமிப்பையும் கொண்டு வருகிறது. இது சுற்றுச்சூழலுக்கு உகந்த துறையாகவும் காணப்படுகின்றது. எரிபொருளை பயன்படுத்தும்போது நிதி நிலைத்தன்மையை கொண்டு வராது. சுற்றுச்சூழலுக்கும் அது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். இயற்கை எரிவாயுவின் விலையும் கணிசமாக அதிகரித்துள்ளது. அனல் மின் நிலையம் மற்றும் எரிபொருள் ஆற்றல்கள் மீது நாடு தங்கியிருக்குமானால் டொலர் செலவையும் எதிர்கொள்ளும். சூரிய சக்தி பயன்பாட்டால் உள்நாட்டு செலவு மட்டுமே காணப்படும்.

உலக சந்தைகளில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் ரூபாவின் பெறுமதியில் ஏற்படும் வீழ்ச்சி போன்ற பிரச்சினைகளுக்கு சூரிய சக்தி ஒரு சிறந்த மாற்று ஆற்றல் மூலமாகும். இது நாட்டிலிருந்து அந்நியச் செலாவணி வெளியேறுவதையும் குறைக்கும். எனவே தயவுசெய்து இந்த முடிவை மறுபரிசீலனை செய்யுங்கள். எரிபொருள் மாபியாவுக்கு இடமளியாது புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஊக்குவிக்க நடவடிக்கை எடுங்கள்.

நட்புவட்டார எரிபொருள் மற்றும் மின்சார மாபியாக்களுக்கு இந்த அரசாங்கமும் அடிமையாகி விட்டது. மக்களின் எரிசக்தி உரிமைகக்காக எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி என்றும் முன்நிற்கும் - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார்.

## மலையக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தக்கவைப்பதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இனிமேல் சிறிதும் பின் நிற்காது, முற்றுமுழுதாக ஆதரவளிக்கும் என்று மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தனர். இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

மலையக மக்களின் அடிப்படை உரிமைகளில் காணி உரிமையும் முக்கியமான ஒன்றாக இருக்கின்றது. நீண்ட காலமாகவே நிலத்திற்கான உரிமையற்ற ஒரு சமூகமாக மலையக மக்கள் இருப்பதோடு எங்கள் உறவுகளின் தலைமுறைக்கே நில உரிமை என்பது மறுக்கப்பட்ட இருளாகவே காணப்படுகின்றது. அதற்கான வெளிச்சம் இதுவரையிலும் எட்டப்படவில்லை என்பதே நிதர்சனமான உண்மை.

மனிதர்கள் காலடிபடாத காடுகளை அழித்து, அதில் பெருந்தோட்டங்களை உருவாக்கி, இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு உழைப்பை வழங்கிய மலையக மக்களின் வழித் தோன்றல்களுக்கு அடிப்படையான காணி உரிமை என்பது மறுக்கப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது. உண்மையிலேயே இது நீதியானதா? இதற்கான நீதியை நிலைநாட்ட

தொடர்ச்சி 6ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# தெல்லிப்பழை நடேஸ்வரா கல்லூரி வீதிச் சீரமைப்பு நேற்றுத் தொடக்கம்

மறுமலர்ச்சிக்கான பாதை திட்டத்தின் கீழ், கிராமப்புற வீதிகள் மற்றும் பாலங்களுக்காக வேலை திட்டத்தின் ஒரு கட்டமாக இன்றைய தினம் தெல்லிப்பழை நடேஸ்வரா கல்லூரி வீதி புனரமைப்பு தொடங்கப்பட்டது.

இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 14 பில்லியன் இலங்கை முழுவதும் உள்ள கிராம்புற வீதிகள் மற்றும் பாலங்களை சீரமைப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்த ஆண்டு ஆயிரம் கிராமப்புறச் சாலைகள் மற்றும் ஏராளமான பாலங்களின் கட்டுமானத்தைத் தொடங்க ஆளும்தரப்புத் திட்டமிடப்பட்டுள்ளது.

அரச வருவாய் அதிகரிப்பதன் காரணமாக கூடுதல் ஒதுக்கீடுகளைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை நாங்கள் ஆராய்ந்து வருகிறோம் என்று நிகழ்வில் பேசிய கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார். ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியின் ஆதரவுடன்தீவுமுழுவதும் கிராமப்புறவீதிமேம்பாடு செயல்படுத்தப்படுகிறது. அடுத்த சில ஆண்டுகளில் இந்த மறுமலர்ச்சிக்கான பாதை திட்டத்தை மேலும் விரிவாக செயல்படுத்த ஆளும்தரப்பு எதிர்பார்க்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.



இத் திட்டத்தின் முதல் கட்டத்தின் கீழ், தீவு முழுவதும் 57 கிராமப்புற சாலைகளில் பணிகள் நேற்றுத் தொடங்கின, மீதமுள்ள சாலைகள் அடுத்த மூன்று மாதங்களுக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறை மூன்றாம் குறுக்கு வீதி மற்றும் தெல்லிப்பழை நடேஸ்வரா கல்லூரி வீதி ஆகியவற்றின் சீரமைப்பு வேலைகள் தொடக்கி வைக்கப்பட்டன.

நடேஸ்வரா கல்லூரி வீதியானது 1200 மீட்டர் நீளமுள்ளது. இதனை 35 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

வீதியின் சீரமைப்பு வேலைகளை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் பாவானந்தராஜா தொடக்கி வைத்தார்.

# ஐஸ் போதைப் பொருளுடன் பெண் உட்பட இருவர் கைது

யாழ்ப்பாணத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் பெண் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நாவாந்துறை பகுதியை சேர்ந்த பெண் ஒருவரையும் இளைஞன் ஒருவரையும் பொலிஸார் இவ்வாறு கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரிடமும் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவர்களிடம் இருந்து 440 மில்லி கிராம் ஐஸ் போதை பொருள் மீட்கப்பட்டதாகப்பொலிஸார்தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# எதிர்காலத்துக்கான எச்சரிக்கை

**கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் தெரிவித்ததுபோல், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இளைய தலைமுறையினர் நாட்டைவிட்டு வெளியே செல்லும் ஆர்வம் அதிகரித்து வருகின்றது. இதன் விளைவாக, மக்கள் தொகை நாளொரு கண்ணாக குறைந்துவருவதாகவும், இது எதிர்காலத்தில் ஆபத்தான நிலையை உருவாக்கக்கூடியதாகவும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.**

**இது வெறும் எண் குறைவு மட்டுமல்ல; நாட்டின் உள் அமைப்பிலும், சமூகத்தின் சமநிலையிலும், பொருளாதார அடித்தளத்திலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. இளைய தலைமுறை என்பது எந்த தேசத்தின் வளர்ச்சிக்கும் முதன்மை ஆற்றலாகும். ஆனால், வேலைவாய்ப்பு இழப்பு, கல்விக்கான வாய்ப்புகளின் நெருக்கடி, அரசியல் நம்பிக்கையின்மை, சமூக நீதி இல்லாமை, மற்றும் அரசியல், பொருளாதார திட்;டங்களில் தெளிவற்ற நிலை ஆகியன இளைஞர்களை நாட்டு விட்டுப் புறப்படும் நிலைக்கு தள்ளுகின்றன.**

**இந்த மாற்றம் ஒரு தனிப்பட்ட ஆசையினால் மட்டும் அமையவில்லை. சமூகத்தில் நிலவும் வருத்தங்கள், எதிர்காலத்தின் பற்றாக்குறை, நம்பிக்கையின்வீழ்ச்சிஆகியவையேஇளைஞர்களை வெளிநாட்டுச் செல்லத் தூண்டுகின்றன. வடக்கு மற்றும் கிழக்கு மண்டலங்களில் குடியிருப்பு குறையும் நிலைமை, பள்ளிகள் காலியானபடி காணப்படுதல், தொழில்கள் மூடப்படுவது போன்றவற்றும் இதனை உறுதி செய்கின்றன.**

**இவ்வாறு நாட்டின் முக்கியமான மனித வளமான இளைஞர்கள் வெளியே செல்வதால், நாட்டுக்குள் திறமைகள் குறைய நேரிடும். தொழில்துறைகள் வளர முடியாது. சமூகத்தில் முதியோர் மட்டுமே அதிகமாகி, ஓர் இடரான சுழற்சி உருவாகும்.**

**இதற்குத் தீர்வு மிக அவசியம். முதலில், இளைஞர்களுக்குதாயகத்திலேயேவாழத்தூண்டும் சூழ்நிலையை உருவாக்க அரசாங்கம் உறுதி காட்ட வேண்டும். வேலைவாய்ப்புகள், தொழில்தொடக்கநிதி உதவிகள், கல்வி விரிவாக்கம், அரசியல் பங்கேற்பு போன்றவையே இளைஞர்களை நாட்டுக்குள் நிறுத்தும் முக்கியமான கருவிகள். மேலும், வடக்கு கிழக்கின் சிறப்புமிக்க பங்களிப்புகளை மதித்து, நிலையான அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.**

**இளைஞர்கள் நாட்டைவிட்டு சென்றுவிடுவதை ஒரு சாதாரண நடத்தை என மதிக்க முடியாது. இது ஒரு தேசிய சிக்கலாகவே பார்க்கப்பட வேண்டும். இளைஞர்களைத் தக்க வைக்கும் நடவடிக்கைகள் இல்லையெனில், எதிர்காலத்தில் நாட்டுக்கே ஒரு பெரும் நம்பிக்கையின்மையும் ஆற்றல் இழப்பும் ஏற்படலாம். இந்த எச்சரிக்கையை அரசாங்கம், மற்றும் சமுதாயமே ஆழமாக புரிந்து கொண்டு, சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.**

# வாள்வெட்டுச் சந்தேகநபர்கள் மூவர் யாழ்ப்பாணத்தில் கைது

## மோட்டார் சைக்கிளும் சிக்கியது



யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்றவாள்வெட்டுவன்முறைச் சம்பவம் தொடர்பாக மூன்று சந்தேகநபர்கள் இன்றையதினம் கைதுசெய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணமாவட்டகுற்றத்தடுப்பு பிரிவால் மேற்கொள்ளப்பட்ட கைது நடவடிக்கையின்போது மூன்று கூரிய வாள்களும் மோட்டார் சைக்கிளும் கூடக் கைப்பற்றப்பட்டன.

உதயபுரம் பகுதியில் சில வாரங்களுக்கு முன்பு சகோதரர்கள் மீது இடம்பெற்ற வாள் வெட்டுச்சம்பவம் தொடர்பான விசாரணைகளின் தொடர்ச்சியாக இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

அரியாலை நாயான்மார்கட்டை சேர்ந்த 25,28,30 வயதுடைய மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# 2000 வருடங்களில் முதல் நாள் சாதனை! கதிர்காமத்திற்கான கானகப் பாதையில் 10 ஆயிரம் பேர் பயணம்!!

( உகந்தையிலிருந்து வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவத்தையொட்டிய கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை நேற்று (20) வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டதும் முதல் நாளில் 10 ஆயிரத்து 450 அடியார்கள் காட்டுக்குள் பிரவேசித்தனர்.

இது கடந்த 2000 ஆண்டு கால வரலாற்றில் முதல் நாளில் சென்ற அதிகூடிய அடியார்களின் எண்ணிக்கையாகும்.

கடந்த காலங்களில் பொதுவாக சுமார் நான்காயிரம் அடியார்கள் முதல் நாளில் பிரவேசிப்பதுண்டு.

கடந்த வருடம் மட்டும் அது 5000 ஐ தாண்டியது.

ஆனால் இவ் வருடம் அது வரலாற்று பதிவாக பத்தாயிரத்தை தாண்டிய வரலாறாக மாறியுள்ளது.

அதுமட்டுமின்றி இன்று சனிக்கிழமை 2 ஆம் நாள் சுமார் நான்காயிரம் அடியார்கள் காட்டுக்குள் பிரவேசித்தனர்.

இம்முறை சுமார் 50 ஆயிரம் பேர் வரை பயணிக்கலாம் என் எதிர்பார்க்கப்படுகிறது.

# சர்வதேச யோகா தின நிகழ்வில் யாழ்ப்பாணத்தில் ஆயிரம் பேர்

பதினோராவது சர்வதேச யோகா தின சிறப்பு நிகழ்வு நேற்று ஆயிரத்திற்கு மேற்பட்டோரின் பங்கேற்புடன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ் இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்தில் காலை 7:30 முதல் 8:30 மணி வரை யோகா நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில் இந்திய துணைத் தூதர் சாய் முரளி, வடக்கு மாகாண பிரதம செயலாளர் தனுஜா, யாழ் மாநகர முதல்வர் மதிவதனி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜா, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன்,

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி, யாழ். மாநகர சபை ஆணையாளர் கிருஷ்ணேந்திரன், இந்திய தூதரக உயர் அதிகாரிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.




வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனித்தனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study MBBS in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION OPEN
CONTACT US FOR ADMISSION
0701348384

## மலையக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும்தரப்புகளும்பெருந்தோட்டகம்பனிகளும் அதற்கான முற்றுமுழுதான முனைப்போடு தொழிற்சங்கங்களும் முன்வருவதில்லை.

மக்கள் அவர்களுக்கான காணி உரிமையை பெற்றுக்கொள்வதற்கு பல்வேறு போராட்டங்களை அன்று தொட்டு இன்றுவரை மேற்கொண்டுதான் வருகிறார்கள். ஆனாலும் இன்றுவரை தீர்வு காண முடியாத தன்மையே காணப்படுகின்றது. காணி உரிமைக்கான முதலாவது போராட்டம் 1946ஆம் ஆண்டு ஜூலை 9 கேகாலையின் உருலவள்ளி பெருந்தோட்டத்தில் முன்னெடுக்கப்பட்டது. அப்பெருந் தோட்டத்தில் அம்மக்களின் 400 ஏக்கர் குடியிருப்பு நிலம் ஆளும்தரப்பால் பறிமுதல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து தமது காணிகளைப் பாதுகாக்க முன்னெடுக்கப்பட்ட போராட்டமாக அது அமைந்திருந்தது.

இலங்கைப் பெருந்தோட்டங்களில் உள்ள இந்தியவம்சாவளித்தொழிலாளர்களின் காணி உரிமைகளைக் கோரி இப்போராட்டத்தில் கேகாலை மற்றும் களனிப் பள்ளத்தாக்கு பிரதேசங்களைச் சேர்ந்த 125,000ற்கும் அதிகமான மக்கள் பங்கேற்றிருந்தனர்.

1972ஆம் ஆண்டின் காணிச் சீர்திருத்தச் சட்டம் குடியேற்றங்கள் உருவாகவும் காணிக் கையகப்படுத்தல்கள் நிகழவும் வழிவகுத்தது. தொடர்ச்சியான காணிக் கையகப்படுத்தல்கள் போராட்டங்களுக்கு வழிவகுத்தன. டெவோன் தோட்டத்தின் 7,000 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிக்கு எதிராக மே 11, 1977 அன்று முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது சிவானு லட்சுமணன் என்ற இளம் தோட்டத்தொழிலாளி பொலிஸாரினால் சுட்டுக்கொல்லப்பட்டார். அதன் விளைவாக பெருந்தோட்ட நிலங்களை பறிமுதல் செய்யும் திட்டம் கைவிடப்பட்டது.

அதேபோன்று, 2000 ஆம் ஆண்டில், மேல் கொத்மலை நீர் மின்சார திட்டத்துக்காக அப்பிரதேச மக்களை வெளியேற்றும் முன்னெடுப்பு தொடர்ச்சியான மக்கள் போராட்டம் காரணமாக கைவிடப்பட்டது.

2014ஆம் ஆண்டு பதுளை மாவட்டத்தின் ஹபுத்தளை பிரதேசத்தில் மிரியாபேத்த பகுதியில் இடம்பெற்ற நிலச்சரிவு பேரழிவின் பின்னர், மலைநாட்டில் வாழும் மக்களுக்கு குடியிருப்புக்கு பொருத்தமான இடங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க கோரிக்கை நாட்டின் அனைத்து பாகங்களில் இருந்தும் முன்வைக்கப்பட்டது. காணி உரிமைகள் மற்றும் ஏனைய உரிமைகளுக்காக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களில் மேற்கொண்ட தியாகங்கள் அளப்பெரியன. மலையக மக்களின் காணி உரிமைக்கான அங்கீகாரத்தை பாதுகாக்க பல ஆர்ப்பாட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதும், அவர்களின் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளதுடன் அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் மீறல்கள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. எனவே, இந்தக்கோரிக்கை இலங்கையின் உரையாடலில் உள்ளடக்கப்படும் ஒரு தேவை தற்போது எழுந்துள்ளது.

மேலும் மலையக மக்களுக்கு பெருந்தோட்டக் காணிகளை வழங்குவதற்கு பெருந்தோட்டக் கம்பெனிகளுக்கும் அரச நிறுவனங்களுக்கும் இடையே காணப்படுகின்ற குத்தகை ஒப்பந்தம் காரணமாக காணி உரிமை மறுக்கப்பட்டு வருகின்றது. அத்தோடு பெருந்தோட்ட கம்பெனிகளுடன் எவ்வித தொடர்புமற்ற காணி சீர்திருத்த ஆணைக்குழு ஜனவசம, நீஸிறீஊ ணளீ, வீயூணு ஆகிய அரச நிறுவனங்கள் மற்றும் பெருந்தோட்ட அமைச்சின் கட்டுப்பாட்டில் உள்ள பெருந்தோட்ட காணிகளை அவற்றில் வாழும் மலையக மக்களுக்கு குடியிருப்பு தேவைக்காக அனுமதிப்பத்திரம், அழைப்பு பத்திரம், அளிப்பு பத்திரம் அறுதியீட்டு உறுதி ஊடாக வழங்குவதற்கு இதுவரையில் எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என்பதே உண்மையாகும்.

மலையக மக்களுக்கு குடியிருப்புக்காக காணி வழங்கப்படும்பொழுது மாத்திரம் மக்களின் உழைப்பால் உருவாக்கப்பட்ட தேயிலைச்செடிகளுக்கும் ரப்பர் மரங்களுக்கும் அம்மக்களை விட அதிக மதிப்பு வழங்கப்பட்டு தேயிலைச்செடிகளையும் ரப்பர் மரங்களையும் காப்பாற்றுவதாக கூறி அவர்கள் தொடர்ந்து லயங்களிலே வாழவைக்கப்படுகின்றனர்.

மலையக சமூகங்களின் காணி உரிமைகளை உறுதி செய்வதற்காகவும் காணியற்றவர்களுக்காக காணிகளைக் கோருவதற்காக ஒத்த சிந்தனையுள்ளவர்களை ஒன்று திரட்டவும் ஒரு தேசிய தினமாக ‘காணி தினம்‘ இருக்கின்றது. இதன் அடிப்படையில் நான்காவது காணி தினத்தினை இன்று (நேற்று) 21 ஆம் திகதி சனிக்கிழமை அட்டன் நகரில் முன்னெடுப்பதற்கு ‘நிலமற்றோர்க்கு நிலம்‘ எனும் தொனிப்பொருளில் ‘மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கம்‘ ஏற்பாடுகளை செய்துள்ளது.

மலையக மக்களின் காணி, பிரச்சினை இன்னும் ஒரு கொள்கை ரீதியில் தேசிய வேலைத் திட்டத்துடன் முன்னெடுக்கப்படாத நிலையில், தற்போது அதற்கான அழுத்தங்கள் பெருமளவில் எழுந்திருப்பது முக்கியமான விடயமாகும். நீண்ட காலமாக மக்களின் தேவையாகவும் மக்களின் நிலம் சார்ந்த இருப்பியலைத் தக்க வைத்து கொள்வதற்கு இவ்விடயத்தில் முன்னெடுப்புக்களை மேற்கொள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இனிமேல் சிறிதும் பின் நிற்காது, முற்றுமுழுதாக ஆதரவளிக்கும் என்று தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.06.2025இல் வெளியிடப்பெற்றது